**Starting time 12.47 P.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No. 169/2026

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt.S. Vennila, Sheristadar of this court, on 21.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : விக்னேஷ்குமார் Father's Name : மகேந்திரன்

Village : எண்.133/1, பஜனைகோவில் தெரு, திருப்புட்குழி கிராமம், பாலுசெட்டிசத்திரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

Age : 39

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால், காஞ்சிபுரம் வட்டம், திருப்புட்குழி கிராமத்தில் வசிக்கிறேன். வாதி இவ்வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால், வாங்கிய கடனை திரும்பி தர வேண்டும் என கேட்டுள்ளார். எவ்வளவு பணம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால், ரூ.6,70,000/-ம் வாங்கியதாக சொல்லியுள்ளார்.

2. நான் காஞ்சிபுரம் வட்டம், திருப்புட்குழி கிராமத்தில் எந்த தெருவில் வசிக்கிறேன் என்பதற்கு எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் எனது வீடு துலுகானத்தம்மன் தெருவில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், அது பற்றி தெரியவில்லை. எனக்கு

நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை யார் வாங்கியது என்றால், எனக்கு அழைப்பாணை வந்த விவரமே தெரியாது. யார் சொல்லி இவ்வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜரானேன் என்றால், நேரடியாக ஆஜராக வேண்டும் என்று வழக்கு ஆவணத்தை கொடுத்தார்கள், அதன் பிறகு நீதிமன்றத்தில் ஆஜரானேன். அதுபோல் நீதிமன்றத்தில் இருந்து கொடுத்த வழக்கு ஆவணங்களை நான் தான் கையெழுத்து செய்து பெற்றுக் கொண்டேன் என்றால், சரிதான்.

3. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், கிராம நிர்வாக அலுவலராக வேலை செய்து வருகிறேன். நான் ஓச்சேரி கிராமத்தில், கிராம நிர்வாக அலுவலராக எப்போது வேலை செய்து வந்தேன் என்றால், 2014–ம் ஆண்டு வேலை செய்து வந்தேன். எத்தனை ஆண்டுகள் அங்கு வேலை செய்து வந்தேன் என்றால், 3 ஆண்டுகள் வேலை செய்து வந்தேன். அந்த சமயத்தில் இவ்வழக்கின் வாதி எனக்கு நன்கு பழக்கமானவர் என்றால், சரியல்ல, அவரை எனக்கு யார் என்றே தெரியாது.

4. நான் ஓச்சேரியல் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்த போது எனக்கு வாதி நன்கு பழக்கமானார் என்றும், அந்த வகையில் தான் ரூ.6,70,000/–ம் அவரிடமிருந்து கடனாக வாங்கினேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகாவது வாதி யார், எந்த ஊரை சேர்ந்தவர் என்று விசாரித்தேனா என்றால், அதற்கு அவசியம் இல்லை என்பதால் விசாரிக்கவில்லை.

5. இவ்வழக்கில் ஆஜரான பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து தாவா கடனுறுதி சீட்டை பார்த்தேனா என்றால், பார்த்தேன். எப்போது தாவா கடனுறுதி சீட்டு பார்த்தேன் என்றால், வழக்கு தாக்கல் செய்த ஆரம்பத்திலேயே பார்த்தேன். நான் அதுபோல் மனு தாக்கல் செய்து கடனுறுதி சீட்டை பார்க்கவில்லை என்றும், பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

6. அதுபோல் கடனுறுதி சீட்டை யார், எங்கு என்னிடம் காட்டியது என்றால், எனது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் காட்டினார். தாவா கடனுறுதி சீட்டை ஆய்வுக்கு அனுப்பி கையெழுத்தை ஆய்வு செய்ய வேண்டி மனு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவின் பேரில் கடனுறுதி சீட்டை ஆய்வுக்கு அனுப்பினார்களா என்றால், இன்னும் அனுப்பவில்லை. அதுபோல் ஆய்வுக்கு அனுப்ப வேண்டி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதுபோல் மனு தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

7. இவ்வழக்கில் வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட மோகன்ராஜ் என்பவர் யார் என தெரிந்துக் கொண்டேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் அவரை குறுக்கு விசாரணை செய்த பிறகாவது அவர் யார் என தெரிந்துக் கொண்டேனா என்றால், இல்லை.

8. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால், என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்றால், என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்துக்கள் யாருடையது என்றால், என்னுடைய கையெழுத்துக்கள் அல்ல.

9. இவ்வழக்கிற்கு முன்பு நான் கையெழுத்து செய்துள்ள ஆவணங்கள் என் வசம் உள்ளது என்றால், சரிதான், அவைகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

10. என்னிடம் காட்டப்படும் இ.ம.வ. எண். 1/2025-ல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால், என்னுடையது தான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டுக்கு முன்பு உள்ள என்னுடைய கையெழுத்துக்கள் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்தால்,

வா.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தானா என தெரியும் என்றால், சரிதான்.

11. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு பதிவு தபால் மூலம் வந்த வழக்கறிஞர் அறிவிப்பை நான் திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால், அறிவிப்பு வந்த விவரமே எனக்கு தெரியாது. அதேபோல் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையை நான் கையெழுத்து செய்து வாங்கவில்லை என்றும், எனது தகப்பனார் தான் கையெழுத்து செய்து வாங்கியுள்ளார் என்றால், நான் சொல்லி எனது தகப்பனார் வாங்கியுள்ளார்.

12. நான் வாதியிடம் இருந்து ரூ.6,70,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு, அதற்காக வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை எழுதிக் கொடுத்துவிட்டு, தற்போது வாதியை ஏமாற்ற வேண்டி பணமே வாங்கவில்லை, கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல. எனவே, வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**Ending time : 01.13 P.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.07.21 18:30:16 +0530